

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2024) சென்னை, கொளத்தூர், எவர்வின் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணிபுரிய 3 உதவிப் பேராசிரியர்கள், ஒரு உடற்கல்வி இயக்குநர், ஒரு கண்காணிப்பாளர் ஆகியோருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இவ்விழாவில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் விஜயகுமார், இந்து சமய அறநிலையத் துறை பள்ளி மற்றும் கல்லூரி ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், எவர்வின் பள்ளி முதல்வர் புருஷோத்தமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடும் மழைப்பொழிவு - நிலச்சரிவால் நூற்றுக்கணக்கானோர் பலி!

# கேரளாவுக்குத் தேவைப்பட்டால் மேலும் உதவிகள் செய்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கேரள முதல்வருடன் பேசியபின் பேட்டி!

**சென்னை, ஆக. 1 -**

**கடுமையான மழையினால் நிலச்சரிவு ஏற்பட்டு கேரள மற்றும் வயநாடு பகுதியில் நூற்றுக்கணக்கான மக்கள் பலியான துயரச் சம்பவம் நடைபெற்றுள்ளதையொட்டி, நேற்று செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கேரள முதல்வருடன் அங்குள்ள நிலவரம் குறித்து தாம் கேட்டறிந்ததாகவும், தமிழ்நாட்டிலிருந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தலைமையில் மீட்புக் குழு அனுப்பப்பட்டுள்ளனர் எனவும், ரூ.5 கோடி நிதி உதவியும் அளிக்கப்பட்டுள்ளது எனவும், தேவைப்பட்டால் மேலும் உதவிகள் செய்கிறோம் எனக் கூறியதாகவும் தெரிவித்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.07.2024) கொளத்தூரில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

நான் கேரளா முதலமைச்சர் அவர்களிடம் பேசினேன். சேதாரத்தை இன்னும் கணக்கெடுக்க முடியவில்லை என்றும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சொன்னார். தமிழ்நாடு அரசின் சார்பாக எந்த உதவிகளும் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அதற்காக இரண்டு IAS அதிகாரிகள் தலைமையில் மருத்துவக் குழு அனுப்பியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், தமிழக அரசின் சார்பில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 கோடி ரூபாய் பணமும் அனுப்பியிருக்கிறோம். தேவைப்பட்டால் இன்னும் உதவிகள் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம்.

**கேள்வி :-** *ஆளுநரின் பதவிக் காலம் முடியப் போகிறது. அவருக்கு மீண்டும் ஆளுநர் பதவி கொடுக்க வாய்ப்பு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது பற்றி....*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :-** நான் ஜனாதிபதியும் இல்லை, பிரதமரும் இல்லை.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலளித்தார்.

# அறநிலையத் துறையாக மட்டுமல்லாமல் அறிவுத் துறையாகவும் செயல்படுகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

இதுவரைக்கும் 1921 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்தி இருக்கக்கூடிய ஆட்சிதான் இந்த திராவிட மாடல் ஆட்சி. 6147 கோடி ரூபாய் மதிப்பிலான கோவில் சொத்துக்களை மீட்டியிருக்கிறோம். கோயில்கள் சார்பில் 10 கல்லூரிகளை உருவாக்கி வருகிறோம். அதில் ஒரு கல்லூரி தான் மயிலை கபாலீஸ்வரர் கல்லூரி என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்!

> **“நம்முடைய திராவிட மாடல் அரசு ஏற்படுத்தித் தருகின்ற வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு தமிழ்நாட்டு மாணவர்கள் முன்னேற வேண்டும். பேச்சுத் திறமை, எழுத்துத் திறமை, படைப்புத் திறமை, நிர்வாக ஆற்றல், அறிவியல்பூர்வமான சிந்தனை, புதிய கண்டுபிடிப்பு என மாணவச் சமுதாயம் வளரவேண்டும். பட்டங்களோடு சேர்த்து அனைத்துத் திறமைகளும் கொண்டவர்களாக நீங்கள் வளரவேண்டும்!”**

இறைப்பணியோடு சேர்த்து கல்விப் பணியையும் அறநிலையத் துறை செய்கிறது. அறநிலையத் துறையாக மட்டுமல்லாமல் இது அறிவுத் துறையாகவும் செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

இந்த நிகழ்ச்சியில், 748 மாணவ - மாணவியருக்கு கல்விக் கட்டணமும், கல்விக்குத் தேவையான கருவிகளையும் வழங்கியிருக்கிறோம். உங்களுக்கு மட்டுமில்லை, கடந்த 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் நாள் இந்தக் கல்லூரியை திறந்து வைத்ததிலிருந்து, கடந்த மூன்று ஆண்டுகளில் 1,405 மாணவ - மாணவிகளுக்கும் இதேபோல கல்விக் கட்டணம் மற்றும் கருவிகளை வழங்கியிருக்கிறோம்.

### புதுமைப் பெண் திட்டத்தில் 2 லட்சத்து 73 ஆயிரம் பேர் பயன்!

சாதி, மதம், பொருளாதாரம், சமுதாயச் சூழல் என்று, இது எதுவுமே ஒருவர் கல்விக்கு தடையாக இருக்கக் கூடாது. இதுதான் என்னுடைய எண்ணம். கல்விதான் உங்களிடமிருந்து யாரும் திருட முடியாத சொத்து. இதைத்தான் நான் தொடர்ந்து மாணவர்களிடம் சொல்லிக் கொண்டு வருகிறேன்.

‘படிப்பு படிப்பு - படிப்பு’ இது மட்டும்தான் உங்கள் கவனத்தில் இருக்கவேண்டும். அதற்காகத்தான் எண்ணற்ற திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. முக்கியமாக, இதுவரைக்கும், அரசுப் பள்ளியில் படித்து, உயர்கல்விக்கு வரக்கூடிய மாணவியருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம். அந்தத் திட்டத்தின்கீழ் 2 லட்சத்து 73 ஆயிரம் மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

அடுத்து, இதுபோல மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டத்தை வருகிற ஆகஸ்ட் 9ஆம் நாள் கோவையில் நான் தொடங்கி வைக்கப் போகிறேன்.

### தனித் திறமைகளையும் மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்!

படிப்புடன் சேர்த்து பல்வேறு தனித்திறமைகளையும் தமிழ்நாட்டு மாணவர் சமுதாயம் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில்தான் ‘நான் முதல்வன்’ திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய திராவிட மாடல் அரசு ஏற்படுத்தித் தருகின்ற வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு தமிழ்நாட்டு மாணவர்கள் முன்னேறவேண்டும். பேச்சுத் திறமை, எழுத்துத் திறமை, படைப்புத் திறமை, நிர்வாக ஆற்றல், அறிவியல்பூர்வமான சிந்தனை, புதிய கண்டுபிடிப்பு என மாணவச் சமுதாயம் வளரவேண்டும். பட்டங்களோடு சேர்த்து அனைத்துத் திறமைகளும் கொண்டவர்களாக நீங்கள் வளரவேண்டும்!



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2024) சென்னை, கொளத்தூர், எவர்வின் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 748 மாணவ, மாணவியர்களுக்கு கல்விக் கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை வழங்கினார். இவ்விழாவில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் விஜயகுமார், இந்து சமய அறநிலையத் துறை பள்ளி மற்றும் கல்லூரி ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், எவர்வின் பள்ளி முதல்வர் புருஷோத்தமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சாதி, மதம், பொருளாதாரம் இது எதுவுமே ஒருவரின் கல்விக்குத் தடையாக இருக்கக்கூடாது!

அண்மையில் டாக்டர் குழுமத்தின் தலைவர் மரியாதைக்குரிய சந்திரசேகர் அவர்கள், ஒரு பேட்டியில் குறிப்பிட்டுக் காட்டினார். உடல்நலத்தைப் பற்றி அக்கறையோடு அவர் பேசியிருக்கிறார். மாணவர்கள், இளைஞர்கள் இடையே obesity எனப்படும் உடல் எடை கூடி வருவதாக சொல்லியிருக்கிறார். சாப்பாட்டு பழக்க வழக்கங்கள், துரித உணவுகள்தான் இதற்குக் காரணம் என்று அவர் தெளிவாக சொல்லியிருக்கிறார்.

### தமிழ்நாட்டு இளைய சமுதாயம் அனைத்திலும் மாபெரும் சக்தியாக திகழவேண்டும்!

சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும்! எனவே, உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் படிக்க முடியும்; திறமைகளை வளர்த்துக் கொள்ளமுடியும். அந்த வகையில்தான், மாணவர்களும், இளைஞர்களும் விளையாட்டு, உடற்பயிற்சி ஆகியவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழ்நாட்டு இளைய சமுதாயமானது கல்வியிலும், தனித்திறமைகளிலும், விளையாட்டிலும், உடல் நலத்திலும் சிறந்தவர்களாக வளர்ந்து, மாபெரும் சக்தியாகத் திகழ வேண்டும் என்று கேட்டு, இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைந்து, உங்களை வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, கேரள மாநிலம் வயநாட்டில் பெருமழை மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் கேரளா மாநில அரசு துறைகளுடன் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட நேற்று (31.7.2024) சென்றுள்ள தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் இணை இயக்குநர் தலைமையிலான 20 தீயணைப்பு வீரர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான மாநிலப் பேரிடர் மேலாண்மை மீட்புக் குழுவின் 20 வீரர்கள் தங்களுடைய மீட்பு பணி சாதனங்களுடன் தயார் நிலையில் உள்ளனர்.

# மதுரை - கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு 10 லட்சத்துக்கும்மேல் வருகையாளர்கள் என்பது மகிழ்ச்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் பெருமிதம்!

சென்னை, ஆக, 1–

மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு திறப்பு விழா நடைபெற்ற குறுகிய காலத்தில் 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வருகையாளர்களாக வருகை புரிந்தது கண்டு தமக்கு பெரும் மகிழ்ச்சியளிக்கிறது என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் பத்து இலட்சம் வருகையாளர்களைக் கடந்துள்ளதையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–

**மதுரையில் உள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் இத்தனை குறுகிய காலத்திற்குள் பத்து இலட்சம் வருகையாளர்களைக் கடந்துள்ளது பெரும் மகிழ்ச்சியளிக்கிறது!**

**‘அறிவிற்சிறந்த தமிழர் என உயர்ந்திட வேண்டும்’ என்ற எண்ணத்துடன் உருவாகிய இந்த மாபெரும் நூலகம் போல், அடுத்து திருச்சியிலும்,கோவையிலும் நூலகங்கள் அமையவுள்ளன.**

**அறிவுத்தாகம் கொண்டோரது தாகத்தைத் தணித்து, தமிழ்நாட்டில் வாழ்வோரது சிந்தனையையும் வாழ்வையும் இத்தகைய நூலகங்கள் வளப்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் பணிகளைத் தொடர்வோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.